விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 007 வள்ளுவர் ஆண்டு 2053 மார்கழி 11 திங்கட்கிழமை (26.12.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/= மட்டுமே

### உள்ளூராட்சி தேர்தலை ஒத்திவைத்துவிட்டு

# ஜனாதிபதி தேர்தலுக்கு வியூகம் வகுப்பு

## ரணில், பசில், வஜிர ஒன்றுகூடி ஆராய்வு

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைத்துவிட்டு உடனடியாக ஜனாதிபதித் தேர்தல் ஒன்றுக்கு செல்வது பற்றி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன எம்.பி, ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ ஆகிய மூவரும் ஒன்றிணைந்து ஆலோசனை நடத்தியுள்ளனர்.

(11ஆம் பக்கம் பார்க்க)

## நிமோனியாத் தொற்று 2 மாத சிசு பலி

(யாழ்ப்பாணம்)

சளியினால் பீடிக்கப்பட்டு நிமோனியா தொற்று ஏற்பட்டு இரண்டரை மாதக் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்த குழந்தை மூன்றாம் கட்டை, கட்டைப்பிராயைச் சேர்ந்த இரண்டரை மாதமேயான ஸ்ரீபன் சபானா என்ற குழந்தை யாகும்.

சளி காரணமாக கடந்த ஆறு நாட்களுக்கு முன்னர் கோப்பாய் வைத்திய 11




## வீட்டில் தனிமையில் வசித்து வந்தவர் சடலமாக மீட்பு

(தருமபுரம்)

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நாதன் புண்ணைநீராவி நாதன் குடியிருப்பு பகுதியில் தனிமையில் வசித்து வந்த நிலையில் குடும்பஸ்தர் ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

தமது பகுதியில் உள்ள அயல் கிராமத்தில் உள்ள மரணச்சடங்கு ஒன்றில் சென்று அங்கு இருந்தவர்களிடம் நாளைய தினம் எனது மரணச் சடங்குக்கு அனை வரும் வரவேண்டு 11

## யாழ் - சென்னை விமான சேவை ஊடாக அதிக மக்கள் பயணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - சென்னை இடையில் சேவையில் ஈடுபடும் விமானத்தில் பயணிகள் நிறைந்திருந்ததாக யாழ். சர்வதேச விமான நிலைய செயற்பாட்டு முகாமையாளர் லக்ஷ்மன் வன்சேகர தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திற்கும் சென்னைக்கும் 11

## கொடிகாமத்தில் ஒருவரின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொயிலாமனை பகுதியில் நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை நபரொருவர் நஞ்சருந்தி உயிரை மாய்த்துள்ளார்.

58 வயதான நப 11

## அரசியல் தீர்வு விடயத்தில் தமிழ்க் கட்சிகளிடம் ஒற்றுமையில்லை

### உதய கம்மன்பில சுட்டிக்காட்டு



(கொழும்பு)

இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளமை தமிழ் மக்களை ஏமாற்றும் மற்றுமொரு செயற்பாடாகும் என பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில 11

## மதுபோதையில் தர்க்கம் கத்தி வெட்டில் முடிந்தது

### நாவற்குழியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் வீடு ஒன்றுக்குள் உட்பிரவேசித்து தர்க்கத்தில் ஈடுபட்ட இளைஞர் ஒருவர் வீட்டாரின் கத்தி வெட்டில் படுகாயம் அடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு படுகாயமடைந்தவர் 11

## அமைதிப் பேச்சுவார்த்தை நடத்த தயார்

### புடின் அதிரடி அறிவிப்பு



(மொஸ்கோ)

போர் குறித்து உக்ரைன் உட்பட அனைத்து தரப்புடனும் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருப்பதாக ரஷ்ய ஜனாதிபதி புடின் 11

## அரசுடனான பேச்சுவார்த்தையில் இந்தியாவின் பங்களிப்பு தொடரும்

### உறுதியளித்தார் சம்பந்தன்



(கொழும்பு)

தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தையின்போது இந்தியாவின் பங்களிப்பு தொடரும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இலங்கை 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்



தோற்றம் 21 – 05 – 1941

மறைவு 25 – 12 – 2022

## சிற்றம்பலம் சுந்தரலிங்கம்

**(ஓய்வுபெற்ற உதவிப் பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி)**

நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் கரவெட்டி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.சிற்றம்பலம் சுந்தரலிங்கம் (ஓய்வு பெற்ற உதவிப் பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி) அவர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை (25.12.2022) இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 27.12.2022 செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

071 847 4412
021 226 4679

(C-5662)


**சுற்றுலா விசா சம்பந்தமான ஆலோசனைகள்**

கனடாவுக்கு சுற்றுலா விசா தேவைப்படுபவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

**Hybrid International Hub (pvt) LTD**

**076 250 0098**
**021 222 1265**

(C-5660)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 076 097 3127

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சாவகச்சேரி பகுதியில் 12 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- பெரிய நாகதம்பிரான் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- A9 பிரதான வீதியில் இருந்து 700 m தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 72 உள்ளன.
- குடிதண்ணீர் கட்டுக் கிணற்றுடன் சிறிய வீடும் உள்ளது.
- நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன.(பைப் லைனிங்)
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**தரகர் தேவையில்லை**


பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

(13910)

தொடர்பு - ஜெயம்

**077 986 5457, 077 814 7389**


# மரண அறிவித்தல்



## முத்துராஜா சின்னமணி

தோற்றம் 19.09.1939

மறைவு 24.12.2022

யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதி, கோண்டாவில் மேற்கு, பாரதி வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்துராஜா சின்னமணி அவர்கள் கடந்த (24.12.2022) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லர் - தங்கமுத்து தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சுவாகி தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற முத்துராஜாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பூமணி, கந்தசாமி மற்றும் இராசமணி, சிவபாதம், சற்குணம், வீரசிங்கம், ராஜதுரை, மனோன்மணி, ஆனந்தராஜா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற பாஸ்கரலிங்கம்(பிரான்ஸ்) மற்றும் கணேஸ்வரி (இலங்கை), சதானந்தம்(சுவிஸ்), சிவராஜா(கனடா), சண்முக லிங்கம்(சுவிஸ்), சிவலிங்கம் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 27.12.2022 செவ்வாய்க்கிழமை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல்
குடும்பத்தினர்

(C-5663)

# பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவை டெங்கு ஒழிப்பு மத்திய நிலையமாக அறிவியுங்கள்

## நுளம்பாவது ஒழியும்–சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் சீற்றம்

(கொழும்பு)

**இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவை டெங்கு ஒழிப்பு மத்திய நிலையமாக அறிவித்தால், நுளம்பு பெருக்கத்தையாவது கட்டுப்படுத்த முடியும் என அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் சனிக்கிழமை கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மின் கட்டணத்தை மீண்டும் அதிகரித்தால் அடுத்த மாதம் முதல் நாடளாவிய ரீதியில் உள்ள சகல பேக்கரி மற்றும் சிற்றுண்டிச்சாலைகளையும் மூட வேண்டிய நிலை ஏற்படும் அபாயம் உள்ளது.

இலங்கை மின்சார சபைக்கு நட்டம் என குறிப்பிடும் மின்சாரத்துறை அமைச்சர் காஞ்சன விஜேசேகர மின்சார சபை நட்டமடைவதற்கான காரணத்தை பகிரங்கப்படுத்தவில்லை.

நாட்டு மக்களுக்கு இலவசமாக மின்சாரம் விநியோகிக்கப்படவில்லை என்பதை அமைச்சர் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

நாட்டு மக்களால் தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு மின்சாரக் கட்டணம் தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளது. மின்சாரத்தை சிக்கனமாக பாவித்தாலும், குறைந்தபட்ச மின்கட்டணம் 5000 ரூபாவைத் தாண்டுகின்றது.

இதனால் நாட்டு மக்கள் சொல்லெணா துயரங்களை எதிர்கொண்டுள்ளார்கள்.

மின்கட்டண அதிகரிப்பால் பேக்கரி மற்றும் சிற்றுண்டிச்சாலைக் கட்டமைப்பு முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய விலைக்கமைய பேக்கரி மற்றும் சிற்றுண்டிச்சாலை உணவுப் பொருட்களின் விலைகளை தீர்மானித்துக்கொள்ள முடியாதளவு நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான பின்னணியில் எதிர்வரும் மாதம் மீண்டும் மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது.

மின்கட்டணத்தை மீண்டும் அதிகரித்தால் அடுத்த மாதம் முதல் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பேக்கரி மற்றும் சிற்றுண்டிச்சாலைகளையும் மூட வேண்டிய நிலை ஏற்படும்.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு என்கிற ஒன்று எதற்காக உள்ளது என்பதை ஆராய வேண்டும்.

அடுத்த மாதம் மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டால் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவை டெங்கு ஒழிப்பு மத்திய நிலையமாக அறிவிக்க வேண்டும். அதன் மூலம் நுளம்புப் பெருக்கத்தையாவது கட்டுப்படுத்த முடியும் என தெரிவித்தார். (க-6)

# பழங்குடி இனத்தவர்கள் தேர்தலில் சுயாதீனமாக போட்டியிட தீர்மானம்

## ஆதிவாசித் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் பழங்குடியின சமூகம் எதிர்வரும் காலங்களில் உள் ராட்சி மன்றத் தேர்தலில் சுயாதீனமாக போட்டியிடத் தீர்மானித்துள்ளது என ஆதிவாசித் தலைவர் உரு வரிகே வன்னிலா எத்தோ தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும், இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமது குடும்பத்தினர் போட்டியிடும் திட்டமில்லை எனவும் ஆதிவாசி மக்களின் பிரச்சினைகளுக்கு கடந்த காலங்களில் அரசியல் தலைவர்கள் உரிய பதிலளிக்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடக் கூடிய தகுதியானவர்கள் தமது சமூகத்தில் உள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (க-6)

# ஐந்து மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக ஐந்து மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் இவ் எச்சரிக்கையை தெரிவித்துள்ளது.

அதன்படி குருநாகல், மாத்தளை, கண்டி, நுவரெலியா கேகாலை ஆகிய மாவட்டங்களுக்கே இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் குறிப்பிட்டுள்ளது. (க-6)

# வெள்ளத்தில் மூழ்கிய கண்டி ரயில் நிலையம்



(கொழும்பு)

கடும் மழை காரணமாக கண்டி புகையிரத நிலையம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக புகையிரதத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, பிரிமத்தலாவ மற்றும் பேராதனை புகையிரத நிலையங்களுக்கு இடையிலும் நானுஓயா புகையிரத கடவைக்கு அருகிலும் மண் மேடுகள் சரிந்து வீழ்ந்துள்ளமையினால், மலையக புகையிரத சேவை தடைப்பட்டுள்ளது.

நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக நேற்று காலை பதுளை புகையிரத நிலையத்தில் இருந்து கொழும்பு கோட்டை வரை பயணிக்கும் புகையிரதங்களும் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் இருந்து நண்பகல் நானுஓயா வரை பயணிக்கும் புகையிரதங்களும் இரத்துச் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-6)

# இரண்டு மாதங்களுக்கு மேலாக துறைமுகத்தில் தேங்கிக்கிடக்கும் மருந்துகள்

(கொழும்பு)

பேராதனை போதனா மருத்துவமனைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட 29 இலட்சம் ரூபாய் பெறுமதியான மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் கடந்த இரண்டு 2 மாதத்துக்கு மேலாக விடுவிக்கப்படாமல் துறைமுகத்தில் தேங்கியுள்ளதாக தெரிய வந்துள்ளது.

குறித்த மருந்து தொகையை விரைவில் பெற்றுத் தருமாறு கோரி பேராதனை சிறிமாவோ பண்டாரநாயக்க விசேட சிறுவர் மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் ஏ.எம்.எஸ். வீரபண்டார. சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தனவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

உடைந்த எலும்பு பாகங்களை பதப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் மருந்துகள் உள்ளிட்ட அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் துறைமுகத்தில் விடுவிக்கப்படாமல் உள்ளதாக குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் உள்ள செல்வந்தர் ஒருவரினால் வழங்கப்பட்ட இந்த மருந்துகள், கடந்த ஒக்டோபர் மாதம் நாட்டை வந்தடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது. (க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பாலகிருஷ்ணன் வெற்றிக்கிண்ணம்

# ஜெரிக் துஸாந்-தசோபன் சிறப்பாட்டம் சென்றலைட்ஸ் அணி சம்பியன்



மானிப்பாய் பரீஸ் விளையாட்டுக்க கழகம் 3 ஆவது தடவையாக நடத்திய பாலகிருஷ்ணன் வெற்றிக்கிண்ண தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் 24 ஆம் திகதி சனிக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் சென்றலைட்ஸ் அணி, ஜொலிஸ்ரார் அணியை 35 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது. கடின பந்து துடுப்பாட்டத்தை முதன் முதலில் 1983 ஆம் ஆண்டு அறிமுகம் செய்து வைத்த ஜொலிஸ்ரார் அணியும் அதே தொடரில் வெற்றி பெற்ற சென்ற லைட்ஸ் அணியும் இவ் இறுதிப் போட்டிஎயில் கலந்து கொண்டனர்.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஜொலிஸ்ரார் அணி களத்தடுப்பை தீர்மானித்தது.முதலில் துடுப்பெ டுத்தாடிய சென்ற லைட்ஸ் அணி 14.2 ஓவர்க ளில் 3 விக் கெட்டுகளை இழந்து 120 ஓட்டங் களைப் பெற்றனர்.ஜெரிக் துஸாந் 64, டார் வின் 36 ஓட்டங்களைப் பெற்றனர்.

களத்தடுப்பில் ஜொலிஸ்ரார் அணியைச் சேர்ந்த சின்துஜன் 3 ஓவர்களில் 26 ஓட்டங் களை கொடுத்து 1 விக்கெட்டினையும் வா மணன் 3 ஓவர்களில் 10 ஓட்டங்களை கொடு த்து 1 விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் அணி 12.2 ஓவர்களில் 10 விக்கெட்டுகளை இழந்து 85 ஓட்டங்களைப் பெற்றனர். இப்போட்டிக்கு ஓய்வு நிலை பிராந்திய முகாமையாளரும் முன்னை நாள் யாழ். மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தின் தலைவரும், முன்னை நாள் சென்ற லைட்ஸ் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரருமான S.P றஜீவன் பிரதம விருந்தின ராக கலந்து கொண்டார்.

போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரராக சென்ற லைட்ஸ் அணியின் ஜெரிக் துஸாந், சிறந்த பந்து வீச்சாளராகவும் இறுதிப் போட்டியின் சிறந்த வீரராக சென்றலைட்ஸ் அணியின் எஸ்.தசோபன், தொடர் நாயகனாக சென்றலைட்ஸ் அணியின் ஆர். இயலரானும் தெரிவு செய்யப்பட்டனர். (க-6)



போட்டியின் சிறந்த பந்து வீச்சாளர், ஆட்ட நாயகன்



போட்டியின் தொடர் நாயகன்




போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரர்

# மார்கழி மாத இராசி பலன்கள் 16.12.2022-14.01.2023

## கும்பம்

**சேவை செய்வதைப் பெருமையாகக் கருதும் கும்ப இராசி வாசகர்களே!**

மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது. மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அதே சமயம் தனஸ்தானத்தில் தானாதிபதி குரு பலம் பெற்றிருக்கிறார். இரண்டு கிரகங்களும் சம அளவில் பலம் பெற்றிருப்பதால் பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும்.புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக் கும். இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறுவதற்கான அறிகுறி தென்படும். தொல்லை தந்தவர்கள் விலகிச் செல்வர். தொழில் வளம் சிறப்பாக அமையும்.

**புதன் வக்கிர இயக்கம்**

உங்கள் இராசிக்கு 5, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், மார்கழி 3 ஆம் திகதி தனுசு இராசியில் வக்கிரம் பெறுகிறார். 8 ஆம் இடத்திற்கு அதிபதியானவர் வக்கிரம் பெறுவது யோகம் தான். "கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் இராஜ யோகம்" என்பதற்கேற்ப எதிர்பாராத நல்ல திருப்பங்கள் ஏற்படும். பணவரவு அதிகரிக் கும்.பக்கபலமாக இருக்கும் நண்பர்கள் உறுதுணையாக இருப்பர். சிக்கல்களில் இருந்து விடுபடுவீர்கள். உங்கள் திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்கும். தொழில் தொடர்பாக எடுத்த முயற்சிகளில் பலன் கிடைக்கும். 5 இற்கு அதிபதியாகவும் புதன் இருப்பதால் பூர்வீகச் சொத்துக்கள் விற்பனையாகலாம். உற்றார். உறவினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

**மகர - சுக்கிரன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 4, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன். மார்கழி 15 ஆம் திகதி மகர இராசிக்குச் செல்கிறார். சுக ஸ்தானம் மற்றும் பாக்கிய ஸ்தானத்திற்கு அதிபதியான சுக்கிரன் விரய ஸ்தானத்திற்கு வரும் பொழுது குடும்ப முன்னேற்றம் கருதி செலவிடும் சூழ்நிலை ஏற்படும். கல்யாண சீர்வரிசைப் பொருட்கள் வாங்குவதிலும், குடும்பத்திற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதிலும் கவனம் செலுத்துவீர்கள். பயணங்கள் பலன் தருவதாக அமையும். வாங்கிய கடனைக் கொடுத்து மகிழ்வீர்கள். தாய்வழி ஆதரவு உண்டு. விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பிலும் கவனம் செலுத்துவீர்கள்.

**புதன் வக்கிர நிவர்த்தி**

மார்கழி 24 ஆம் திகதி தனுசு இராசியில் சஞ்சரிக்கும் புதன் வக்கிர நிவர்த்தியாவதால் நல்ல மாற்றங்கள் வந்து சேரும். குறிப்பாக பஞ்சமாதிபதி பலம் பெறும்பொழுது நெஞ்சம் மகிழும் சம்பவங்கள் நிறையவே நடைபெறும். அஞ்சும்படியாக இருந்த பகைவர்கள் விலகுவர். ஆதரவுக்கரம் நீட்டுபவர்களின் எண்ணிக்கை உயரும். தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் இப்பொழுது மனம் மாறுவர். பொருளாதாரம் திருப்தியளிக்கும். தொழிலில் புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். வாடகைக் கட்டடத்தில் நடைபெற்ற தொழிலை சொந்தக் கட்டடத்திற்கு மாற்றும் அமைப்பு சிலருக்கு உண்டு.

**செவ்வாய் வக்கிர நிவர்த்தி**

மார்கழி 29 ஆம் திகதி . ரிஷபத்தில் சஞ்சரிக்கும் செவ்வாய் வக்கிர நிவர்த்தியாகிறார். உங்கள் இராசிக்கு 3, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் பலம் பெறும் இந்த நேரம் சகோதர ஒற்றுமை பலப்படும். பஞ்சாயத்துக்கள் சாதகமாக முடியும். வருமானப் பற்றாக்குறை அகலும். திட்டமிட்ட காரியங்களைத் திட்டமிட்டபடி செய்து முடிப்பீர்கள். வியாபாரம் மற்றும் தொழிலில் இருந்த மந்த நிலை மாறும். அரசுவழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஆதரவோடு புதிதாகச் செய்யும் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். தொழில் ஸ்தானத்திற்கு அதிபதியாகவும் செவ்வாய் இருப்பதால் புதிய தொழில் தொடங்கும் சிந்தனை உருவாகும். பிள்ளைகளின் மேற்படிப்பு. வேலைவாய்ப்பை முன்னிட்டு எடுத்த முயற்சி கைகூடும். நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த அரசுவழி உத்தியோகம் இப்பொழுது கிடைக்கலாம். அக்கம் பக்கத்தில் உள்ளவர்களின் பகை மாறும். உத்தியோகத்தில் பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் பணியில் சேர வாய்ப்பு உருவாகும். பெரிய மனிதர்களின் அறிமுகம் கிடைத்து பிரச்சினைகளில் இருந்து விடுபடுவீர்கள். இம்மாதம் சனிக்கிழமை தோறும் பெருமாள், லட்சுமி வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் ஏழரைச் சனியில் விரயச் சனியின் ஆதிக்கம் நடைபெறுவதால் சுப விரயங்கள் அதிகரிக்கும். உடல் நலத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். ஆடை. ஆபரண சேர்க்கை உண்டு. உடன் பிறப்புகள் உறுதுணையாக இருப்பர். பிள்ளைகள் வழியில் சுபச்செலவு அதிகரிக்கும். வீடு. இடம் வாங்கும் முயற்சி கைகூடும். பணிபுரியும் பெண்களுக்கு இடமாற்றம் உறுதியாகலாம். வேலைப்பளு கூடும். மேலதிகாரிகளின் கெடுபிடியால் மனக்குழப்பம் உருவாகும். சனிக்கிழமை விரதமும் சனி பகவான் வழிபாடும் தடைகளை அகற்றும்.

## மீனம்

**முயற்சி ஒன்றே வாழ்வில் முன்னேற வழி என்றுரைக்கும் மீன இராசி வாசகர்களே!**

மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது. மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு. உங்கள் இராசியிலேயே பலம் பெற்று சஞ்சரிக்கிறார். இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனியின் பார்வை உங்கள் இராசியின் மீது பதிகிறது. எனவே பொருளாதார நிலை திருப்தி தரும் என்றாலும் விரயங்கள் கூடுதலாகவே இருக்கும்.

**புதன் வக்கிர இயக்கம்**

உங்கள் இராசிக்கு 4, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், மார்கழி 3 ஆம் திகதி தனுசு இராசியில் வக்கிரம் பெறுகிறார். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் வக்கிரம் பெறுவதால் கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். கடமையில் இருந்த தொய்வு அகலும். தாய்வழி ஆதரவு உண்டு. வீடு வாங்கும் முயற்சியில் இதுவரை இருந்த குழப்பங்கள் அகலும். திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடைபெற வழிபிறக்கும். தெய்வப் பற்று மிக்கவர்களின் ஒத்துழைப்போடு நல்ல காரியங்கள் பலவும் நடைபெறும். பணி புரியும் இடத்தில் கேட்ட சலுகைகள் கிடைக்கலாம்.

**மகர - சுக்கிரன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 3, 8 இற்கு அதிபதியான சுக்கிரன், மார்கழி 15 ஆம் திகதி மகர இராசிக்குச் செல்கின்றார். அவர் 11 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது உடன் பிறப்புகளுக்கு வேலை கிடைத்து அதன் மூலமும் வருமானம் வரலாம். உள்ளம் மகிழும் சம்பவம் இல்லத்தில் நடைபெறும். வாங்கிய கடனைக் கொடுத்து மகிழ்வீர்கள். வருங்கால நலன் கருதி நீங்கள் தீட்டிய திட்டங்கள் வெற்றிபெறும். சொத்து சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்கள் சாதகமாக முடியும். பணி ஓய்வு பெற்ற பிறகும் கூட நீங்கள் பணிபுரியும் வாய்ப்பு உண்டு.

**புதன் வக்கிர நிவர்த்தி**

மார்கழி 24 ஆம் திகதி. தனுசு இராசியில் சஞ்சரிக்கும் புதன் வக்கிர நிவர்த்தியாவதால் குடும்பத்தில் சில பிரச்சினைகள் தலை தூக்கும். கொள்கைப் பிடிப்போடு செயற்பட இயலாது. தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகளில் குறுக்கீடுகள் ஏற்படலாம். தொல்லை தரும் எதிரிகளின் பலம் மேலோங்கும். "தீட்டும் திட்டங்களை செயற்படுத்த இயலவில்லையே" என்று கவலைப்படுவீர்கள். மனக்குழப்பம் உருவாகும். வருமானம் திருப்தி தரும் என்றாலும் விரயங்கள் கூடுதலாக இருக்கும். புது முயற்சிகளில் ஈடுபடும் பொழுது பொறுமையும் நிதானமும் தேவை.

**செவ்வாய் வக்கிர நிவர்த்தி**

மார்கழி 29 ஆம் திகதி ரிஷபத்தில் சஞ்சரிக்கும் செவ்வாய் வக்கிர நிவர்த்தியாகிறார். உங்கள் இராசிக்கு 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் வக்கிர நிவர்த்தியாகிப் பலம்பெறும் இந்த நேரம் அற்புதமான நேரமாகும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொகை வரவும் திருப்தி தரும். திட்டமிட்ட காரியங்களைத் திட்டமிட்டபடியே செய்து முடிப்பீர்கள். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள். தைரியமும் தன்னம்பிக்கையும் கூடும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் விருப்ப ஓய்வில் வெளிவந்து புதிய தொழில் ஒன்றை தொடங்க முன்வருவர். செவ்வாய் 9ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்குவதால் பாக்கிய ஸ்தானம் பலம்பெறுகிறது. எனவே உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். இல்லம் கட்டிக் குடியேற வேண்டும் அல்லது இல்லம் வாங்கிக் குடியேற வேண்டுமென்று நினைத்தவர்களுக்கு அதுவும் கைகூடும். பெற்றோர் வழி உறவில் நெருக்கம் ஏற்படும். ஆலயத் திருப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். தீர்த்த யாத்திரை மற்றும் ஆன்மிகப் பயணங்கள் மேற்கொள்ளும் வாய்ப்பு உண்டு. உடன்பிறப்புகளின் இல்லத்தில் நடைபெறும் விழாக்களை முன்னின்று நடத்துவீர்கள். இம்மாதம் செவ்வாய்க் கிழமை தோறும் துர்க்கையை வழிபடுவதன் மூலம் சிறப்பான பலன்களை வரவழைத்துக் கொள்ளலாம்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் இராசிநாதன் குரு பலம் பெற்று உங்கள் இராசியிலேயே சஞ்சரிப்பதால் யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். உடல்நலம் சீராகி உற்சாகப்படுத்தும். கணவன் - மனைவிக்குள் அன்பும் பாசமும் அதிகரிக்கும். புதிய சொத்துக்கள் வாங்கும் முயற்சி கைகூடும். பிள்ளைகளின் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகள் பலன்தரும். பக்கத்தில் உள்ளவர்களின் பகைமாறும். உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. பணிபுரியும் பெண்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவும் கேட்ட இடத்திற்கு இடமாறுதலும் கிடைக்கும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# ஆழிப்பேரலை ஊழிக்கூத்தாடி ஆண்டுகள் 18 ஓடி மறைந்தன!

கடல் தாயே நினைவிருக்கிறா?

எம் உறவுகளை உன்னுடன் அள்ளிச் சென்று இன்றுடன் 18 வருடங்கள் கடந்து விட்டன. எப்படி நீ அதை மறப்பாய். ஏனென்றால் நீ அள்ளிச் சென்ற அத்தனை உறவுகளும் உன் மடியில் விளையாடியவர்கள் தானே?

வெயிலோ, மழையோ, குளிரோ, புயலோ, உன்னை நம்பி நாடி வந்த உறவுகளை ஊருடனேயே அள்ளி விழுங்கி ஏப்பம் விடும் அளவுக்கு நாம் என்ன பிழை செய்து விட்டோம்.

“சிறுநண்டு மணல் மீது படம் ஒன்று கீறும்

சிலவேளை அதை வந்து கடல் கொண்டு போகும்...”

என்று சின்னஞ்சிட்டுக்கள் அத்தனையும் உன்னருகில் உன் நுரை அள்ளி ஆளுக்காள் அப்பி விளையாடிய போதெல்லாம் சிறிதேனும் கோபப்படாமல் சிரித்துக் கொண்டிருப்பாயே அலையால் தாலாட்டியபடி.

வானிலை அறிக்கை வாசிக்கப்படும் மீனவர் கடலில் இறங்க வேண்டாமென இருப்பினும் நாம் புறப்படுவோம்.

கட்டுமரம் தனை தள்ளி பாயை விரித்து உன்னில் பயணிக்க தாயாய் எமைக் கரை சேர்ப்பாயே மறந்து விட்டாயா?

கருமேகம் சூழ்ந்து கடலே ஊரை விழுங்குவது போல உரு மறைப்பாய்.

அப்போதெல்லாம் எம் பிள்ளைகள் உன் அழகை ரசித்துக் கொண்டே தரையில் நண்டு பிடித்துக் களிப்புறுவர்.

நீ அவர்களை அடித்ததில்லையே!

பாடசாலை முடிந்தவுடன் பிள்ளைகள் வீடு வருவார்களோ, இல்லையோ, முதலில் வந்து உன்னில் நீச்சல் அடித்து பழகிய போதெல்லாம் மெல்லிய அலையால் அவர்களை மிதத்தி நீச்சல் கற்பிக்கும் ஆசிரியராயிருந்தாயே? எப்படி உன்னால் இப்படி விஸ்வரூபம் எடுக்க முடிந்தது.

நாம் செய்யாத குற்றத்தை செய்து விட்டதாய் யார் சொன்னாலும் உன் மீது தானே சத்தியம் செய்வோம். உன் மீது யாரும் பொய்ச் சத்தியம் செய்தால் எம் இதயம் நொருங்கி விடும். ஏனென்றால் உன்னையும் எங்களையும் பிரித்து விட முடியாதபடி எம்முணர்வுகளில் பின்னிப் பிணைந்திருந்தாய். ஆனால் அந்த உறவுப் பின்னல்களையெல்லாம் உடைத்தெறிந்து எம் உறவுகளையும் உடைத்தெறிந்து விட்டு மீண்டும் நீ அமைதி ஆனதை எம்மால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லையம்மா!

கடலம்மா! கடலம்மா! என்று உப்புக் காற்றைக் கிழிக்கும் அளவுக்கு கத்திக் கத்தி உன்னை அழைப்போமே அப்போதெல்லாம் எம்முடன் எம்மில் ஒருவராய் இருக்கிறாய் என்றல்லவா நினைத்திருந்தோம்.

எம் உறவுகள் அத்தனையையும் நீ விழுங்கி விட்டு மௌனமாய் இருந்தபோதும் கூட உன்னிடம் வந்து தஞ்சமடைந்தோமே. தாயை விட்டு எப்படி சேய்கள் வாழும். நீ தானே எங்கள் அத்தனைக்கும் சொந்தக்காரி.

நீ எங்களை எட்டி உதைத்தாலும் உன்னை விட்டு எம்மால் எப்படி இருந்திட முடியும்? ஏனென்றால் நீ எம் அம்மா. அல்லது அன்பு என்பதால் எம் வாழ்வில் இருந்து வாழ்வாதாரம் அத்தனையிலும் நீ என்று உன்னை எம் உயிரினில் வைத்திருக்க நீயோ எம் ஊரில் ஒரு பூண்டைக் கூட விட்டு வைக்காமல் பிடுங்கி எடுத்து விட்டாய்.

இருந்தும் என் செய்ய? உன்னை விட்டால் எமக்கு யாரம்மா என அத்தனையும் மறந்து மீண்டும் உன்னிடத்தே அடைக்கலம் ஆகி விட்டோம். ஆனாலும் எம் அத்தனை உறவுகளின் நினைவுகள் நீங்கா வடுக்களாய் எம் நெஞ்சில் நிலைத்து விட்டன..

எது எப்படியோ எம் உறவுகள் அத்தனையும் உன்னில் வாழ்கிறார்கள் எனும் நினைவு எம்மிலிருந்து வரும் பெருமூச்சின் வெப்பத்தை ஓரளவு தணித்துக் கொள்கிறது.

அம்மா! உன்னிடம் உன் பிள்ளைகள் மீண்டும் மீண்டும் இரந்து கேட்கிறோம் இன்னொரு முறை நீ இப்படி கோரதாண்டவம் ஆடி விடாதே. ஏனென்றால் இத்தனை ஆண்டுகள் கழிந்தாலும் எம்மிலிருந்து இழக்கக் கூடாத அனைத்தையும் இழந்து புழுவாய்த் துடித்து இப்போதே அந்த ரணங்களில் இருந்து மீண்டெழுந்து கொண்டிருக்கிறோம்.

பட்டமரங்களின் நிழலிலே விதைக்கப்பட்ட விதைகளை முளைக்க விடு. அவை விருட்சமாகி விழுது விடட்டும். இது உன்னை தாயாக நினைக்கும் ஒரு தனயனின் ஆத்மார்த்த குரல்.

**மாவை நா.கஜேந்திரன்**

## எல்லாம் கடந்து ஒன்றானோம்

சுனாமி வந்து சுக்கு நூறாக்கிய போது
சுபீட்சத்திற்காய் ஒன்றானோம்

இரத்த தானம் வழங்க இங்கு நீண்ட வரிசையில்
இனம் மறந்து ஒன்றானோம்

கண்ட உடல்களை தாவிச் சென்று
காரியம் செய்ய ஒன்றானோம்

அள்ளுண்டவர்க்கும் குற்றுயிரானவர்க்கும்
அனுதினமும் வேண்டிட
ஆலயங்களில் பூசைகளில் ஒன்றானோம்

ஆழிப் பேரலையில் அழிவைச் சந்தித்து
அழுத மக்களுக்காக நாமும்
அழுது ஆறுதலுக்காய் ஒன்றானோம்

உடுபுடைவை உணவு கொடுத்து
உயிர்கள் காக்க ஒன்றானோம்

தங்க இடமின்றி தவித்த போது
தக்க இடம் கொடுக்க ஒன்றானோம்

உலக நாடுகளிடம் உதவிகள் வேண்டிட
ஊடகங்களில் ஒன்றானோம்

மருந்துகள் தட்டுப்பாடான போது
விருந்துகளை ஒறுத்து
அருமந்த உயிர்காக்க ஒன்றானோம்

மருத்துவமனையில் கட்டில்கள் நிரம்பியதால்
வைத்திருந்த வீட்டுக் கட்டிலை வழங்கி
மனிதாபிமானத்தில் ஒன்றானோம்

மடியில் கிடத்தி மருந்தைக் கொடுத்து
மனிதநேயத்தால் ஒன்றானோம்

வாகனத்தில் உயிர்களை வகையாக ஏற்றி வந்து
வழியில் உயிர்காக்க ஒன்றானோம்

விற்பனை நிலையங்களையெல்லாம்
விரைவாகப் பூட்டி
வித்தியாசமின்றி ஒன்றானோம்

பணம் கொடுத்து பாணும் பருப்பும் வழங்கி
பங்காளிகளானோம்

கறுப்புக் கொடிகள் காரியாலயங்களில் கட்டி
கவலைகளில் ஒன்றானோம்.

பூதவுடல்களைப் புதைப்பதற்கு நிலம் கொடுத்து
புனிதப் பயணத்தில் ஒன்றானோம்

இத்தனையிலும் இனம் மதம் சாதி பிராந்தியம்
இறுதி வரை கடந்து ஒன்றானோம்

பயங்கர அழிவுக்குள் சிக்கிப் பதினெட்டு ஆண்டுகளாயின
அலையின் ஈரம் காய்ந்து விட்டன ஆனால் கண்ணீரின்
ஈரம் இன்னும் காயவில்லை.

**ஜெயம் ஜெகன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழி இசைவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்தியத் துணைத்தூதரகம், நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டு கலைக்கூடல் மற்றும் யாழ். வணிகர் கழகம் இணைந்து நடத்தும் "மார்கழி இசைவிழா - 2022" எதிர்வரும் 27,28,29 ஆகிய தினங்களில் மாலை 4.45 மணி தொடக்கம் இரவு 9 மணிவரை யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது. (6)

# வெட்டுக் காயங்களுடன் உயிருக்கு ஊசலாடிய இருவர் மருத்துவமனையில் அனுமதி

(குருமன்காடு)

வவுனியா, சிதம்பரபுரம் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட கோமரசன்குளம் பகுதியில் வெட்டுக் காயங்களுடன் வீதியில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த இருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, கோமரசன்குளம் பகுதியில் வெட்டுக் காயங்களுடன் உயிருக்குப் போராடியபடி வீதியில் ஒருவர் கிடந்துள்ளார். உயிருக்குப் போராடிய நிலையில் காணப்பட்ட குறித்த நபரை நோயாளர் காவு வண்டியை வரவழைத்த பொது மக்கள் வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் அனுமதித்ததோடு குறித்த பகுதியில் வெட்டுக் காயங்களுக்குள்ளாகிய மேலும் ஒருவரையும் அப் பகுதி மக்கள் மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர்.

போத்தல்களினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தினால் இருவரும் காயங்களுக்குள்ளாகியுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சிதம்பரபுரம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (க-6-250)


## மணிவிழா வாழ்த்து

திருமதி. சோமேஸ்வரி அமரசிங்கம்

ஆசிரியர்: யா/மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் றோ.க.த.க.பாடசாலை

(BA Dip in Edu)



சேவைக்காலம்

யா/சுதுமலை வடக்கு த.க.வித்தி

26.03.1990-15.03.1994

யா/மானிப்பாய் சோதி வேம்படி வித்தி

16.03.1994-03.05.1994

யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தி

04.05.1994-09.01.2008

யா/பண்டத்தரிப்பு பிரான்பற்று கலைமகள் வித்தி (பகுதி நேரம்)

09.02.2014

யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

10.01.2014-09.02.2014

யா/மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் றோ.க.த. க.பாடசாலை

10.02.2014-31.12.2022

எமது பாடசாலையில் இணைந்து மாணவர்களின் உயர்வுக்காய் உழைத்து உன்னத நற்பணியாற்றி ஓய்வு பெறும் ஆசிரியை சோமேஸ்வரி அமரசிங்கம் அவர்களின் ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துகின்றோம்.

(3907)

பாடசாலைச் சமூகம்

யா/மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் றோ.க.த.க.பாடசாலை




இயேசு பிரானின் அவதாரத்தினை சிறப்பிக்கும் பாலன் பிறப்பினை முன்னிட்டு நேற்று முன்தினம் நள்ளிரவு திருப்பலி, ஆராதனை யாழ். மாவட்டத்திலும் மன்னார் மறைமாவட்டத்திலும் உள்ள பெரும்பாலான தேவாலயங்களில் இடம் பெற்றது. (படங்கள்: சிவசாந்தன், கஜிந்தன், ஜோசப்நயன்)



சுன்னாகம் கரிரேஜ் றோட்டறிக் கழகத்தினர் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் நீரிழிவு நோயாளர்களுக்கு ஒரு மாத காலத்துக்குத் தேவையான மெட்போமின், இன்சுலின் போன்ற ஒரு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் ரூபாய் பெறுமதியான மருந்துப் பொருட்கள் நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டன. (படம்: சிவசாந்தன், சுபேசன்)

# இராசிபலன்

26.12.2022
மார்கழி 11, திங்கட்கிழமை
திருதியை முற்பகல் 9.44 மணிவரை

திருவோணம் முன்னிரவு 10.03 மணிவரை
சுபநேரம் 12.27-1.57 மணிவரை
இராகுகாலம் 7.57-9.27 மணிவரை

சதுர்த்தி விரதம்
சந்திராஷ்டமம் - திருவாதிரை,புனர்பூசம்

வளவன்

**மேஷம்** வீட்டுத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், போசன நன்மையுண்டு.

**கடகம்** சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**துலாம்** செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**மகரம்** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, தொட்ட காரியங்களில் வெற்றி பெற கணபதியை வழிபட வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு.

**ரிஷபம்** அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், வம்பு வழக்குகள் தீர்ந்து வளம் காணும் நாள்.

**சிம்மம்** பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், தொழில் போட்டிகள் மாறும், தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** சேமிப்பு உயர்வதற்கான வழியைக் கண்டு கொள்வீர்கள், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், பொது வாழ்வில் புகழ் கூடும், வளர்ச்சி கூடும் நாள்.

**கும்பம்** சாப்பிடக் கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்வீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், சயன சுகக்குறைவான நாள்.

**மிதுனம்** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, வேலைச்சுமை அதிகரிக்கும் நாள்.

**கன்னி** மன நிறைவு கூடும் நாள், அதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும், பொதுவாழ்வில் புகழ்கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**தனுசு** நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், தொழிலில் எதிர்பாராத சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறும் வாய்ப்புண்டு.

**மீனம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும் நாள், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு.

காலத்தின் அருமை அறிந்தவர் அதை வீணாக்க மாட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதனைகளை போதிக்க வேண்டியவர்கள்

# போதைக்குள் மூழ்கிப் போகிறார்கள்

### வேதனைப்படும் ஊடகத்துறை அமைச்சர்

(கொழும்பு)

**பௌத்த அறக்கோட்பாட்டை போதிக்க வேண்டிய பிக்குகள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளமை கவலைக்குரியது. நாட்டுக்குள் திட்டமிட்ட வகையில் போதைப்பொருள் பாவனை வியாபித்துள்ளது என போக்குவரத்து மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.**



மஹரக பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பொருளாதார ரீதியில் நாடு மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் நாட்டில் போதைப்பொருள் பாவனை சடுதியாக தீவிரமடைந்துள்ளது. இளம் தலைமுறையினர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளார்கள்.

இந்நிலை தொடர்ந்தால் நாட்டின் எதிர்காலம் முழுமையாக கேள்விக்குள்ளாகும்.

ஒரு நாடு பொருளாதார ரீதியில் பாதிக்கப்படும் போது அந்த நாட்டில் சட்டம் மற்றும் அடிப்படை ஒழுக்கத்திற்கு மாறான செயற்பாடுகள் தலை தூக்கும். இலங்கையிலும் தற்போது அவ்வாறான தன்மை காணப்படுகிறது.

பௌத்த அறக்கோட்பாட்டை போதிக்க வேண்டிய பிக்குகள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளமை கவலைக்குரியது. பாலி மற்றும் பௌத்த பல்கலைக்கழகம் தொடர்பில் ஊடகங்களில் வெளியாகும் செய்திகளை உணர்வு பூர்வமாக பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

திட்டமிட்ட வகையில் நாட்டில் போதைப்பொருள் பாவனை வியாபித்துள்ளது. போதைப்பொருள் வியாபாரம் மற்றும் பாவனையை இல்லாதொழிக்க 9 மாகாணங்களிலும் விசேட போதைப்பொருள் செயலணியை ஸ்தாபிக்க அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது என அவர் தெரிவித்தார். (க-6)

# இடி, மின்னல் தாக்கியதில் 27 கால்நடைகள் பரிதாப பலி

(மட்டக்களப்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றம் காரணமாக நேற்று நத்தார் தினத்தன்று அதிகாலை ஏற்பட்ட பாரிய இடி, மின்னல் தாக்கத்தினால் மட்டக்களப்பு ஏறாவூரிலுள்ள வீடொன்றின் பண்ணை மீது இடி, மின்னல் விழுந்ததில் அந்தப் பண்ணை முற்றாக கருகி சாம்பலாகியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றம் காரணமாக நேற்று முன்தினத்திலிருந்து பாரிய இடி, மின்னலுடன் மழை பெய்து கொண்டிருந்ததைத் தொடர்ந்து, நேற்று அதிகாலை ஏற்பட்ட பாரிய இடி, மின்னலினால் குறித்த பண்ணையில் இருந்த 9 ஆடுகள், 15 கோழிகள், 3 வாத்துக்கள் என்பன கருகி சாம்பலாகியுள்ளன.

இரு தட்டுக்களை கொண்ட அந்தப் பண்ணையின் மேற்பகுதியில் ஆடுகளும் கீழ்ப்பகுதியில் கோழிகளும் வாத்துக்களும் இருந்த நிலையிலேயே குறித்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (க-6)

## 12 ஆம் ஆண்டு நினைவு நாள்





அன்னை மடியில் –21.06.1956
அநியாய அழிப்பில் –26.12.2010
அமரர்.
**மார்க்கண்டு சிவலிங்கம்**
B.Sc(Agri) SLEAS II
(முன்னாள் பிரதிக் கல்விப்பணிப்பாளர் மருதனார்மடம்)

தோற்றம்– 20.03.1937
மறைவு– 20.08.2011
அமரர்.
**மார்க்கண்டு பரிமளம்**

அன்பு காட்டுகையில் அன்னையாய்
அறிவுரை கூறுகையில் தந்தையாய்
நெறிப்படுத்துகையில் நல்லாசானாய்
துன்பம் நேர்கையில் தோழனாய்
அநியாயங்களை தட்டிக் கேட்பதில் வீரனாய்
கல்வியிலே உயர்வு பெற்று பார்புகழ் வாழ்ந்தீர்கள்
பாவிகள் தான் பறித்தனரே உங்கள் உயிரை.

ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(13861)

உரும்பிராய் மேற்கு,
மூன்று கோவிலடி.

தகவல்
குடும்பத்தினர்.

## 18 ஆம் ஆண்டு நினைவினில்

மலர்வு– 28.03.2004
உதிர்வு– 26.12.2004

**இராசரத்தினம் சகிதன்**



எங்கள் முத்து மணியே
நாங்கள் பெற்றெடுத்த மூத்தமகனே!
கடலன்னை பல்லாயிரம் முத்துக்களை
தன்னிடத்தே வைத்துக் கொண்டும்
ஈரைந்து மாதமாய் உன்னை
கருவினில் சுமந்து
ஈன்றெடுத்த ஒன்பது மாதங்களிலேயே
கவர்ந்து சென்றதும் ஏனோ?
இன்றும் உன்
வருகையை நோக்கி- தினம் தினம்
வாசல் பார்க்கின்றது எம் கண்கள்


(13908)

செ.இராசரத்தினம் (செல்வன்)
செல்லையா பல்பொருள் வாணிபம்
கடற்கரை வீதி, முல்லைத் தீவு.
077 945 9941

என்றும் உன் வரவை
எதிர்பார்க்கும்
அம்மா, அப்பா, தம்பிமார்.

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
15 . 03 . 1962



மறைவு
01 . 01 . 2017

**சீனியன் சிவமூர்த்தி**
(பிரதேசசபை உத்தியோகத்தர்)

ஓடி உருண்டது உமைப்பிரிந்து ஆறாண்டு
வாடி வதங்குகின்றோம் உமைப்பிரிந்து எண்ணி நிதம்
ஆறாண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும்
எம் நெஞ்சமதில் உங்கள் நினைவுகள் நிலைத்திருக்கும்.

(f-5651)

பிராமணன் தோட்டம்,
கரவெட்டி மேற்கு, கரவெட்டி.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 59





அவனுடைய குடும்பத்தார் பரம பக்தர்களான வைஷ்ணவர்கள். அவனுடைய தந்தை ஒரு நாள் நதிக்கரையில் உள்ள நந்தவனத்துக்குப் போனார். அங்கே ஒரு பெண் குழந்தை அநாதையாகக் கிடப்பதைக் கண்டார்.

குழந்தையை எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தார். குழந்தை களையாகவும் அழகாகவும் இருந்தபடியால் குடும்பத்தார் அன்புடன் போற்றிக் காப்பாற்றினார்கள். நந்தவனத்தில் அகப்பட்டபடியால் நந்தினி என்று குழந்தைக்குப் பெயரிட்டார்கள். ஆழ்வார்க்கடியான் அப்பெண்ணைத் தன் தங்கை என்று கருதிப் பாராட்டி வந்தான்.

நந்தினிக்குப் பிராயம் வளர்ந்து வந்தது போல் பெருமாளிடம் பக்தியும் வளர்ந்து வந்தது. அவள் மற்றொரு 'ஆண்டாள்' ஆகிப் பக்தர்களையெல்லாம் ஆட்கொள்ளப் போகிறாள் என்று அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் நம்பினார்கள்.

இந்த நம்பிக்கை ஆழ்வார்க்கடியானுக்கு அதிகமாயிருந்தது. தந்தை இறந்த பிறகு அப்பெண்ணை வளர்க்கும் பொறுப்பை அவனே ஏற்றுக் கொண்டான். இருவரும் ஊர் ஊராகச் சென்று ஆழ்வார்களின் பாசுரங்களைப் பாடி வைஷ்ணவத்தைப் பரப்பி வந்தார்கள். நந்தினி துளசி மாலை அணிந்து பக்திப் பரவசத்துடன் பாசுரம் பாடியதைக் கேட்டவர்கள் மதிமயங்கிப் போனார்கள்.

ஒரு சமயம் ஆழ்வார்க்கடியான் திருவேங்கடத்துக்கு யாத்திரை சென்றான். திரும்பி வரக் காலதாமதமாகி விட்டது. அப்போது நந்தினிக்கு ஒரு விபரீதம் நேர்ந்துவிட்டது.

பாண்டியர்களுக்கும் சோழர்களுக்கும் இறுதிப் பெரும்போர் மதுரைக்கு அருகில் நடந்தது. பாண்டியர் சேனை சர்வ நாசம் அடைந்தது. வீரபாண்டியன் உடம்பெல்லாம் காயங்களுடன் போர்க்களத்தில் விழுந்திருந்தான்.

அவனுடைய அந்தரங்க ஊழியர்கள் சிலர் அவனைக் கண்டுபிடித்து எடுத்து உயிர் தப்புவிக்க முயன்றார்கள். இரவுக்கிரவே, நந்தினியின் வீட்டில் கொண்டு வந்து சேர்த்தார்கள். பாண்டியனுடைய நிலைமையைக் கண்டு மனமிரங்கி நந்தினி அவனுக்குப் பணிவிடை செய்தாள்.

ஆனால் சீக்கிரத்தில் சோழ வீரர்கள் அதைக் கண்டுபிடித்து விட்டார்கள். நந்தினியின் வீட்டைச் சூழ்ந்து கொண்டு உட்புகுந்து வீர பாண்டியனைக் கொன்றார்கள். அங்கிருந்த நந்தினியின் அழகைக் கண்டு மோகித்துப் பழுவேட்டரையர் அவளைச் சிறைபிடித்துக் கொண்டு போய்விட்டார்.

இது மூன்று வருடத்துக்கு முன்னால் நடந்தது. பிறகு ஆழ்வார்க்கடியான் நந்தினியைப் பார்க்கவே முடியவில்லை. அன்று முதல் ஒரு தடவையேனும் நந்தினியைத் தனியே சந்தித்துப் பேசவும், அவள் விரும்பினால் அவளை விடுதலை செய்து கொண்டு போகவும் ஆழ்வார்க்கடியான் முயன்று கொண்டிருக்கிறான். இது வரையில் அம்முயற்சியில் வெற்றி பெறவில்லை.

இந்த வரலாற்றைக் கேட்ட வந்தியத்தேவனுடைய உள்ளம் உருகிவிட்டது. கடம்பூர் மாளிகையில் பல்லக்கில் இருந்தது நந்தினி இல்லை என்றும், இளவரசன் மதுராந்தகன் என்றும் ஆழ்வார்க்கடியானிடம் சொல்லி விடலாமா என்று ஒரு கணம் யோசித்தான்.

பிறகு, ஏதோ ஒன்று மனத்தில் தடை செய்தது. ஒருவேளை இந்தக் கதை முழுதும் ஆழ்வார்க்கடியானின் கற்பனையோ என்று தோன்றியது. ஆகையால் கடம்பூர் மாளிகையில் தான் அறிந்து கொண்ட இரகசியத்தைச் சொல்லவில்லை.

அப்போது சற்றுத் தூரத்தில், கடம்பூர் வீரன் குதிரையுடன் வந்து கொண்டிருந்தான்.

"தம்பி! எனக்கு நீ உதவி செய்வாயா?" என்று ஆழ்வார்க்கடியான் கேட்டான். (தொடரும்...)

# சிறுவர் அரங்கம்



## பரமார்த்த குரு கதைகள்

### தோல் இருக்கச் சுளை விழுங்கி

(நேற்றைய தொடர்ச்சி)

அவர்கள் சிந்தனையிலே தங்கள் குருநாதருக்கு ஒரு குதிரை மிக மிக அவசியத் தேவை என்று தோன்றி விட்டது. குரு ஒரு குறையும் இல்லாமல் இருக்க, முக்கியமாக ஐந்து சிஷ்யர்கள் இருந்தாலும், உயர்வான தங்க்ள் குரு மகானுக்கு இப்படியெல்லாம் குறையும் சங்கடமும் நேரலாமா? முதல் வேலையாக எப்பாடு பட்டாவது குருவுக்கு ஒரு குதிரை வாங்கியாக வேண்டும் என்று அவர்கள் தங்களுக்குள் பலமாக முடிவு கட்டிக் கொண்டார்கள். தங்கள் முடிவைத் தாங்க முடியாத சந்தோஷத்தோடு குருநாதரிடம் பணிவோடு தெரிவித்துக் கொண்டனர். பரமார்த்த குருவுக்கு அதைக் கேட்டதும் பரமானந்தம் ஏற்பட்டு விட்டது.

இருந்தாலும் அதை அப்பட்டமாக வெளியே காட்டிக் கொள்ளாமல் தமக்குள்ளேயே சிரமப்பட்டு அடக்கிக் கொண்டார். "குதிரை வாங்குவதைப் பின்னால் பார்க்கலாம். இப்போது முன்னால் உள்ள நதியைத் தாண்ட வேண்டுமே, அதைப் பாருங்கள், போய்ப் பாருங்கள்... இப்போதாவது நதி தூங்குகிறதா இல்லையா? என்று" என்று மிகவும் கவலையோடு கூறினார்.

"இதோ புறப்பட்டு விட்டேன். நானே பார்த்து விட்டு வருகிறேன்" என்று அதே மிலேச்சன், அதே கொள்ளிக் கட்டையோடு ஆற்றை நோக்கி அடிமேல் அடி வைத்து சத்தமின்றி மெதுவாக நடந்து சென்றான்.

அதுவரை அவன் கையிலேயே இருந்து கொண்டிருந்த அந்தக் குச்சியின் முனையிலிருந்து நெருப்பு எப்போதோ உயிரை விட்டு விட்டிருந்தது. மிலேச்சன் முன்பு செய்ததைப் போலவே, அந்தக் கட்டையைத் தண்ணீருக்குள் தோய்த்தான். "சுர்ர்" என்று முன்போல எந்தச் சத்தமும் வரக் காணோம். கட்டையின் முனையில் நெருப்பு இருந்தாலல்வா "சுர்ர்' என்று ஒலி எழுப்பும்! எனவே மிலேச்சன், சத்தமும் வரவில்லை, புகையும் இல்லை. நதி தூங்குகிறது என்று எண்ணிச் சந்தோஷம் அடைந்தான்.

ஒரே துள்ளலாக, மகிழ்ச்சியைக் கட்டுப்படுத்த முடியாமல் வேகமாக ஓடி வந்து அவர்கள் முன் நின்று, "இது தான் ஏற்ற சமயம்! வாருங்கள் வாருங்கள்! இப்போதே ஆற்றிலே இறங்கி விடலாம். அது நன்றாகத் தூங்கிக் கொண்டிருக்கிறது!" என்று கூறினான்.

அவர்கள் அனைவரும் பரபரப்போடு எழுந்து நின்றார்கள். "பயப்படாமல் வாருங்கள். அது தூங்கும் போதே ஆற்றில் இறங்கி அக்கரைக்குப் போய்விடலாம்" என்று அவர்களைத் துரிதப்படுத்தினான் மட்டி.

அவர்களும் அவசர அவசரமாக, வேகவேகமாகப் புறப்பட்டார்கள். ஆற்றின் அருகே வந்ததும் ஒருவரையொருவர் கட்டிப்பிடித்தபடி, மெதுவாக, கால்களை எவ்வளவுக்கெவ்வளவு சப்தம் எழாதவாறு தூக்கி வைக்க முடியுமோ, அப்படித் தூக்கி வைத்து, நெஞ்சு படக் படக்கென்று பயத்தால் வேகமாக அடித்துக் கொள்ள உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு, எப்படியோ அந்தக் கரையை அடைந்து விட்டார்கள். (தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஒரு மனிதனுடைய இலட்சியம் என்னவென்று அறிந்துகொண்டால்போதும். அதனைக்கொண்டே அவனை அறிந்துகொள்ளலாம். - ஹோம்ஸ்

வலம்புரி

TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பூதான இயக்கத்தை அமைத்தால் என்ன?

தமிழ் மக்கள் பேரவையின் சந்திப்பொன்றில், பூதான இயக்கமொன்றை அங்குரார்ப்பணம் செய்தால், அதன்மூலம் காணியற்றவர்களுக்கு காணி வழங்க முடியும் என்றும் புலம்பெயர் நாடுகளில் இருக்கக்கூடிய எங்கள் உறவுகளான நிலச் சுவாந்தர்களின் காணிகளும் ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்களும் வீணே கிடக்கின்றன என்றும் அவற்றை அவர்களிடம் இருந்து தானமாகப் பெற்று நிலமற்றவர்களுக்கு அதனை இலவசமாக வழங்க முடியும் என்றும் கூறினோம்.

இதைச் செய்வதன்மூலம் அவர்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் வீட்டுத் திட்டம் கிடைக்கும் என்றும் கருத்துரைத்தோம்.

அப்போது அங்கிருந்த முக்கியஸ்தர் ஒருவர்; வினோபாஜியின் பூதான இயக்கம் தோல்வியில் முடிந்துபோனது என்பதைப் பதிலாகத் தந்தார்.

வினோபாஜியின் பூதான இயக்கம் தோற்றதா? அல்லது வெற்றிச் சாதனை படைத்ததா? என்பதல்ல நம் ஆய்வு.

தவிர, வினோபாஜி ஆரம்பித்த பூதான இயக்கம் தோற்றிருந்தால், அது அவர் வாழ்ந்த காலம். அன்றைய களச் சூழ்நிலை, மக்களின் மனநிலை எனப் பல விடயங்கள் அதற்குக் காரணமாக அமையும்.

மாறாக, எங்கள் தமிழர் தாயகத்தில் சரியான திட்டமிடலுடன் நேர்மையும் உண்மையும் வெளிப்படைத்தன்மையும் உடையதாகப் பூதான இயக்கத்தை ஆரம்பித்தால், அது நிச்சயம் வெற்றி பெற்றிருக்கும்.

ஆம், இன்று எங்கள் தாயகத்தில் அதிலும் குறிப்பாக வலி.வடக்கில் உள்ள மாவிட்டபுரம், கீரிமலை, காங்கேசன்துறை, தையிட்டி, மயிலிட்டி, பலாலி போன்ற இடங்களில் இராணுவம் விடுவித்த பகுதிகளில் இருக்கக்கூடிய ஏகப்பட்ட காணிகளும் மற்றும் தீவகம், கிளிநொச்சி, வன்னி ஆகிய இடங்களிலும் அடையாளம் காணப்படாமல் - உரிமை கோரப்படாமல் கணிசமான காணிகளும் இருப்பதை அவதானிக்க முடிகிறது.

இவ்வாறான காணிகளின் சொந்தக்காரர்கள் பெரும்பாலும் புலம்பெயர் நாடுகளில் வசிப்பவர்களாக - வயது மூப்புடையவர்களாக - அவர்களின் அடுத்த சந்ததிக்கு அது பற்றி எதுவும் தெரியாமல் அல்லது அதுவிடயத்தில் அவர்கள் எந்தவித கருசனையும் இல்லாத நிலையில், ஏகப்பட்ட நிலங்கள் உரிமை கோரப்படாமல் காடாக் வீணே கிடக்கிறது.

அதேநேரம் இந்த மண்ணில் வாழுகின்ற எத்தனையோ ஏழைக் குடும்பங்கள் ஒரு துண்டு காணி இல்லாமல் பரிதவிக்கின்றன.

தவிர, அளவுக்கு மிஞ்சிய காணிகளை வைத்திருப்பவர்கள் அவற்றை உரிய முறையில் பராமரிக்காமலும் எல்லைப்படுத்தாமலும் ஆட்சிப்படுத்தாமலும் இருப்பதன் காரணமாக, காணி மோசடிகளும் வழக்குகளும் கைதுகளும் நடந்தாகின்றன.

எனவே இந்த இக்கட்டான சூழ்நிலையில், பூதான இயக்கமொன்றை ஆரம்பித்து உரிமை கோரப்படாத நிலபுலங்களை உரியவர்களுடன் தொடர்புகொண்டு அவற்றின் ஆவணங்களைப் பெற்று நிலமற்றவர்களுக்கு வழங்கும் செயற்றிட்டத்தை ஆரம்பிக்க வேண்டும்.

இது இன்றைய அவசர தேவையாகும். இவ்வாறானவற்றைச் செய்வதுதான் எங்கள் மக்களுக்கான சேவை என்பதாகும்.

### சுனாமி நினைவு தினம்

## நாடு முழுவதும் இன்று 2 நிமிட மௌன அஞ்சலி

இலங்கை சுனாமி அனர்த்தத்தை எதிர்கொண்டு இன்றுடன் 18 வருடங்கள் பூர்த்தியாகின்றன. இந்த வகையில், சுனாமி அனர்த்தத்தினால் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் வகையில் விசேட நிகழ்ச்சிகள் பல இன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

சுனாமி அனர்த்தத்தை நினைவுகூரும் வகையில், டிசம்பர் 26 ஆம் திகதி "தேசிய பாதுகாப்பு தினமாக" பிரகடனப் படுத்தப்பட்டுள்ளதுடன், இந்த நினைவேந்தல் நிகழ்ச்சிகள் நாடளாவிய ரீதியிலும், மாவட்ட மட்டத்திலும் இடம்பெறுவதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவி ஊடகப் பணிப்பாளர் ஜானக ஹந்துன்பதிராஜா தெரிவித்தார்.

இதன் பிரதான நிகழ்வு காலி சுனாமி நினைவுத்தூபியில் இன்று காலை நடைபெறவுள்ளது. பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் உள்ளிட்ட அரசியல் பிரதிநிதிகள் மற்றும் பாதுகாப்பு செயலாளர், முப்படையினர், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் சுனாமி அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களின் உறவினர்கள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

சுனாமி அனர்த்தம் மற்றும் பல்வேறு அனர்த்தங்களினால் உயிரிழந்த இலங்கையர்களை நினைவுகூரும் வகையில் இன்று காலை 9.25 முதல் 9.27 வரை நாடு முழுவதும் இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துமாறு மக்களிடம் கோரிக்கை விடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (4,7)

## சீரற்ற காலநிலை; தொ.இல. அறிமுகம்

தென்மேற்கு வங்காள விரிகுடா கடற்பகுதியில் ஏற்பட்ட காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக நாட்டின் பல பகுதிகளிலும் கடும் மழை பெய்து வருகிறது.

தென்மேற்கு வங்காள விரிகுடா கடற்பகுதியில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக எதிர்வரும் காலநிலை நிலைவரம் குறித்து வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அதுல கருணாநாயக்க நாட்டுமக்களுக்கு சில அறிவித்தல்களை விடுத்துள்ளார்.

கடும் மழை காரணமாக, ஏதேனும் ஒரு பிரதேசத்திலோ அல்லது இடத்திலோ மண்சரிவு ஏற்படுவதற்கான ஆரம்ப அறிகுறிகள் தென்பட்டால், அது தொடர்பில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

117 என்ற விசேட தொலைபேசி எண்ணிற்கு தொடர்புகொண்டு ஏதேனும் பேரிடர் ஏற்படும் சூழ்நிலை மற்றும் அனர்த்தங்கள் குறித்த தகவல்களை தெரிவிக்க முடியும் என்று தெரிவித்துள்ளது. (4,7)

## நாட்டை கட்டியெழுப்ப ஜே.வி.பியால் முடியாது

### திஸ்ஸ அத்தநாயக்க

(கொழும்பு)

நாட்டை மீளக் கட்டியெழுப்பும் திட்டம் எதுவும் மக்கள் விடுதலை முன்னணியிடம் இல்லை என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும் பிரபலமடைவதற்காக அக்கட்சியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க, மக்கள் மத்தியில் கட்டுக்கதைகளை கூறிவருவதாகவும் சாடியுள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க இதனை கூறியுள்ளார்.

அவ்வாறு பெற்றுக் கொள்ளும் பிரபலத்தை தேர்தலில் வாக்குகளாக மாற்ற முடியாது என்றும் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். (4,7)

## வவு. சிறையிலிருந்து 6 கைதிகள் விடுதலை

நத்தார் தினத்தை முன்னிட்டு வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 6 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைவாக வவுனியா சிறைச்சாலை அத்தியட்சகர் எஸ்.இந்திரகுமார் தலைமையில் இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

அதற்கமைவாக சிறு குற்றச் செயல்கள் மற்றும் தண்டப்பணம் செலுத்தாமை போன்றன காரணமாக வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த குறித்த 6 கைதிகளும் பொது மன்னிப்பு வழங்கி விடுவிக்கப்பட்டனர்.

இதேவேளை நாடளாவிய ரீதியில் உள்ள சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 309 கைதிகள் நேற்று விடுதலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4,7)

## விளையாட்டு பொருட்களுடன் வந்த போதைப்பொருள்

### ஒருவர் கைது

விளையாட்டுப் பொருட்களுக்குள் மிகவும் சூட்சுமமாக மறைத்து அமெரிக்காவிலிருந்து இலங்கைக்கு அனுப்பப்பட்ட சுமார் இரண்டு கோடி ரூபா பெறுமதியான குஷ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த பார்சலை எடுத்துச் செல்ல சுங்கத்துக்கு வந்த நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

விசேட அதிரடிப்படை தலைமையக முகாமின் விசேட சுற்றிவளைப்பு பிரிவு (கொழும்பு வலயம்) சுங்கம் மற்றும் போதைப் பொருள் ஒழிப்புப் பணியக அதிகாரிகளின் உதவியுடன் இந்த சுற்றிவளைப்பை நடத்தியதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கொழும்பு 14 ஐச் சேர்ந்த 44 வயதான ஒருவர் அதனை எடுத்துச்செல்ல வந்திருந்தபோதே அவர் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (4,7)

## போதை வர்த்தகத்தில் சுற்றுலாப் பயணிகள்

### அமைச்சர் மனுஷ நாணயக்கார

(கொழும்பு)

சுற்றுலா விசாவில் பல்வேறு நாடுகளில் இருந்து இலங்கைக்கு வரும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் பதிவு, அனுமதிப்பத்திரம் இன்றி பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு வருவதாகவும், இது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சர் மனுஷ நாணயக்கார காலி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவிற்கு ஆலோசனை வழங்கினார்.

இவர்கள் பல்வேறு பொருட்களை விற்பது முதல் போதைப்பொருள் விற்பனை வரை பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு வருவதாகவும், சொந்த நாட்டு நாணயத்தை எடுத்துக்கொண்டு திரும்புவதாகவும், இதனால் நாட்டின் பொருளாதாரத்திற்கு எந்த நன்மையும் ஏற்படவில்லை எனவும் அவர் சுட்டிக் காட்டினார். (4,7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** ஓமினி அலுமினியம் தொழிற்சாலை - கரந்தன், நீர்வேலி, கரந்தன், போயிட்டி, பொக்கணை, ஊரெழு, Maravanpulo wind power plant ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலையில் சிறப்பாக நடைபெற்ற மார்கழிப்பெருவிழா



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சைவசித்தாந்தத் துறையும் தென்னாடு செந்த மிழாகம சிவமடத்தின் சைவ மாணவர் சபையும் இணைந்து நடத்திய மார்கழிப் பெருவிழா-2022 நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இடம் பெற்றது.

இந் நிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்குள் அமைந்துள்ள ஸ்ரீ பரமேஸ் வரன் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட வழிபாடுகளைத் தொட ர்ந்து, தேவாரத் திருமுறை யுடன் சைவக் குரவர்கள் நால் வரும் எழுந்தருள யாழ்ப்பா ணப் பல்கலைக்கழக கைலா சபதி அரங்கில் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

காலை, மாலை அரங்கங் களாக நடைபெற்ற நிகழ்வுக ளில் காலை அரங்க நிகழ்வாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவசித்தாந்தத் துறை தலை வர் கலாநிதி.பொன்னுத்துரை சந்திரசேகரம் தொடக்க உரை யையும் யாழ்ப்பாணப் பல் கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சற்குணராசா வாழ்த்துரையையும் ஆற்றி னர்.

நடைபெற்ற மாலை அரங்க நிகழ்வில் தொடக்க உரை, வாழ்த்துரை, திருமுறை விண் ணப்பம், சிறப்புரை, திருவாசக கட்டுரைப் போட்டிக்கான பரிசில் வழங்கலென்பனஇடம்பெற்றன.

திருமுறை விண்ணப்பம் மற்றும் சிறப்புரைக்காக இந்தி யாவின் தமிழகத்திலிருந்து துறைசார் சான்றோர்களான அண்ணாமலைப் பல்கலை க்கழக தேவார உதவிப் பேரா சிரியர் முனைவர். திருஞான. பாலச்சந்திரன் ஓதுவார் மற்றும் தருமை ஆதீனப் புல வர் சிவத் திரு.எம்.கே.பிரபா கரமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டி ருந்தனர். (க-6-33-104)

# சூறாவளி பனிப்புயலில் சிக்கி அலறும் அமெரிக்கா

## 18 பேர் பலி; இயல்பு நிலை பாதிப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் சூறாவளி பனிப்புயலுக்குள் சிக்கி 18 பேர் பலியாகி இருப்பதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.

அங்கு வரலாறு காணாத வகையில் கடும் பனிப்பொழிவு நிலவி வருகிறது. வெடிகுண்டு சூறாவளி என்று அழைக்கப்ப டும் இந்த பனிப்புயல் பல மாகாணங்களை தாக்கி வரு கிறது. இதனால் தொடர்ந்து பனிகொட்டியபடியே இருக்கிறது.

பனிப்புயலால் அமெரிக்கா வில் மக்களின் இயல்பு வாழ் க்கை முற்றிலும் பாதிக்கப்பட்டு ள்ளது. சாலைகளில் மலை போல் பனி குவிந்து இருப்பதால் விமானங்கள், புகையிரத சேவைகள் கடுமையாகப் பாதிக் கப்பட்டுள்ளன. தினமும் ஆயி ரக்கணக்கான விமானங்கள் இரத்துச் செய்யப்படுகின்றன. பல இடங்களில் வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத் துக்கள் ஏற்பட்டன. இதில் உயி ரிழப்புகளும் ஏற்பட்டிருக்கின் றன.மேலும் பல மாகாணங்க ளில் மின்சாரம் துண்டிக்கப் பட்டுள்ளது. சுமார் 17 இலட்சம் பேர் மின்சாரமின்றி இருளில் தவிக்கின்றனர்.

சாலைகள், மற்ற இடங்க ளில் கிடக்கும் பனிகளை அக ற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படு கின்றன. ஆனாலும் இடை விடாத பனிப்பொழிவு இருப்ப தால் தொடர்ந்து பனி குவிந்து கொண்டே இருக்கிறது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட் டுள்ளது. (க-6)

# ரஷ்யாவில் தீ விபத்து 20 பேர் உடல் கருகி பலி

(மொஸ்கோ)

ரஷ்யா, கெமரோவோவில் உள்ள சைபீரியா நகரில் பதிவு செய்யப்படாத முதியோர் இல்ல த்தில் நேற்று முன்தினம் திடீ ரென, தீ விபத்து ஏற்பட்டதில் இதுவரை 20 பேரின் உடல்கள் சடலமாக மீட்கப்பட்டுள்ளன.

அனைவரும் முதியவர்கள் என்பதால், கட்டடத்திற்குள் சிக் கியவர்கள் வெளியில் வரமுடி யாமல் அவதிப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து தகவல் அறிந்து விரைந்த தீயணைப்பு வீரர்கள், கட்டடத்தின் இரண்டாம் தளம் முழுவதும் எரிந்த தீயை கட்டுக் குள் கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டனர். மேலும் கட்டடத்திற்குள் சிக்கியவர்களை மீட்கும் பணி யிலும் ஈடுபட்டுள்ளனர். (க-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 300 | 400 | 400 |
| உருளைக்கிழங்கு | 150 | 180 | 150 | 200 |
| பச்சைமிளகாய் | 250 | 300 | 280 | 300 |
| தக்காளி | 300 | 300 | 250 | 320 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 200 | 180 | 160 |
| கோவா | 120 | 120 | 180 | 200 |
| கரட் | 200 | 320 | 350 | 400 |
| பூசணி | 100 | 100 | 100 | 160 |
| புடோல் | 200 | 200 | 200 | 280 |
| வாழைக்காய் | 150 | 140 | 100 | 160 |
| சின்ன வெங்காயம் | 800 | 500 | 700 | 900 |
| பெரிய வெங்காயம் | 250 | 180 | 180 | 250 |
| பாகற்காய் | 800 | 500 | -- | 700 |
| வெண்டக்காய் | 200 | 160 | 150 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 | 160 |
| பயற்றங்காய் | 450 | 450 | 450 | 400 |
| லீக்ஸ் | 450 | 280 | 400 | 480 |
| பீற்றூட் | 400 | 380 | 350 | 400 |
| கறிமிளகாய் | 800 | 700 | 700 | 800 |
| முருங்கைக்காய் | 800 | -- | -- | -- |
| போஞ்சி | 450 | 450 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 350 | 200 | 150 | 360 |
| கீரை - 1 பிடி | 80 | 120 | 120 | 150 |
| தேசிக்காய் | 100 | 100 | 120 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 80 | 60-90 |
| இராசவள்ளி | 300 | 350 | -- | 350 |
| வெங்காயப்பூ | 450 | 700 | -- | -- |
| முள்ளங்கி | 180 | 160 | 140 | 160 |
| பொன்னாங்காணி | -- | 120 | 100 | 60 |
| வல்லாரை | 50 | 45 | 40 | 50 |
| ஈரப்பலா | 120 | 140 | -- | 160 |

# உயர்கல்வி தடைக்கு எதிராக ஆப்கானில் பெண்கள் போராட்டம்



(காபூல்)

தலிபான்கள் ஆட்சிப் பொறு ப்பில் உள்ள ஆப்கானிஸ்தா னில் பெண்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட் டுள்ளன.

அந்த வரிசையில், பெண்க ளுக்கு பல்கலைக் கழகங்களில் உயர்கல்வி பயிலவும் சமீபத் தில் தடை விதிக்கப்பட்டது. இதற்கு மாணவ, மாணவிகள் மற்றும் கல்லூரி பேராசிரியர் கள் என பல தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்து, நாடு முழுவதும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், உயர்கல்வி தடைக்கு எதிராக பெண்கள் நேற்று முன்தினம் ஹெராத் நகரில் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

போராட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் மாகாண ஆளுநரின் இல்லத்தை முற்றுகையிடுவ தற்காக ஊர்வலமாக புறப்பட்டு, கல்வி எங்களின் உரிமை என்று முழக்கங்கள் எழுப்பிய படி சென்றனர்.

குறித்த போராட்டக்காரர்கள் கலைந்து செல்லாததால், பாது காப்புப் படையினர் தண்ணீரை பீய்ச்சி யடித்து விரட்டியடித்தனர். இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. (க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதுபோதையில்...

புதிய குடியேற்றத் திட்டம் நாவற்குழியைச் சேர்ந்த கே. மிதுர்சன் (வயது-22) என்பவராவார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை 300 வீட்டுத்திட்டம் நாவற்குழி பகுதியில் உள்ள வீடு ஒன்றில் மேற்படி இளைஞர் மதுபோதையில உள் நுழைந்து தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளார்.

இதனால் வீட்டில் இருந்தவர் கத்தியினால் வெட்டிய நிலையில் படுகாயமடைந்த இளைஞர் யாழ்.போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (4-7,60)

## அரசுடனான...

அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தையின்போது இந்தியாவின் மத்தியஸ்தம் அல்லது மேற்பார்வை அவசியம் என்று கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகள் மற்றும் இணக்கப்பாட்டை ஏற்படுத்திய விக்னேஸ்வரன், சுரேஷ் பிரேமச்சந்திரன் உள்ளிட்டவர்கள் வலியுறுத்த ஆரம்பித்துள்ள நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது தமிழர் தரப்புக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் முன்னெடுக்கப்படும் பேச்சுவார்த்தைகளின் போதும் இந்தியாவின் வகிபாகம் நிச்சயமாக இருக்கும். தற்போதைய சூழலில் அந்த வகிபாகம் எவ்வாறானது என்று வரையறுக்கப்படாவிட்டாலும், நிச்சயமாக இந்தியா முக்கியமான பாத்திரத்தினை வகிக்கவுள்ளது.

அந்த வகையில், தமிழ் மக்கள் தமது நியாயமான அபிலாஷைகளை பெற்றுக்கொள்வதற்கு இந்தியா நிச்சயமாக தனது பங்களிப்பை பூரணமாகவும் அர்ப்பணிப்புடனும் வழங்கும் எனத் தெரிவித்தார். (4-7)

## அரசியல் தீர்வு...

தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்து வெளியிட்டுள்ள அவர், இலங்கையில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு எதிர்வரும் 75ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர் தீர்வு காண்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளமை நகைப்புக்குரியது.

ஆனாலும், கடந்த 13ஆம் திகதி இடம்பெற்ற கட்சித் தலைவர் கூட்டத்தில் மாறுபட்ட பல கருத்துக்களை தமிழ் தரப்பினர் முன்வைத்துள்ளனர்.

அரசியல் தீர்வு விவகாரத்தில் தமிழ் அரசியல் கட்சிகளிடம் முதலில் ஒற்றுமை கிடையாது. சமஷ்டி அடிப்படையிலான தீர்வும் சாத்தியமற்றது.

இனப் பிரச்சினைக்கு தீர்வாக மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. இப்போது குறுகிய அரசியல் நோக்கத்துக்காக மாகாண சபை தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது.

மாகாண சபை தேர்தலை விரைவாக நடத்த தமிழ் அரசியல் தலைமைகள் அரசாங்கத்துக்கு எவ்வித அழுத்தமும் பிரயோகிக்கவில்லை.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் எதிர்க் கட்சியாக இருந்தபோது கூட மாகாண சபை தேர்தல் பிற்போடப்பட்டது. மாகாண சபை தேர்தலை நடத்தினால், தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் பாதுகாக்கப்படும்" எனத் தெரிவித்தார். (4-7)

## நிமோனியாத்...

சாலையில் குழந்தைக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் குழந்தை மயக்கமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதித்த போதும் குழந்தை உயிரிழந்து விட்டது.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

பிரேத பரிசோதனையில் சளி காரணமாக நிமோனியா தொற்று ஏற்பட்டு மரணம் சம்பவித்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது. (4-7,60)

## வீட்டில் தனிமை...

மென அழைப்பு விடுத்துவிட்டு அத்துடன் நாளைய தினம் எனது மரணச் சடங்குக்கு மேள வாத்தியமும் வர வேண்டும் என அவர்களிடம் கூறிவிட்டு வீட்டு முற்றத்தில் நின்ற மாமரத்தில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார் வைத்திலிங்கம் சீவரத்தினம் (வயது - 55) என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டு உள்ளார் இச் சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (4-7,316)

## விமான சேவை...

இடையிலான விமானங்களுக்கு பயன்படுத்தப்படும் அலையன்ஸ் எயார் ATR-72 ரக விமானத்தில் 60 பயணிகள் அமரக்கூடிய வசதி உள்ளது என தெரிவித்துள்ளார். (4-7)

## கொடிகாமத்தில்...

ரொருவரே இவ்வாறு உயிரை மாய்த்துள்ளார்.

உயிரிழந்தவரது சடலம் மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-7,30)

## ஜனாதிபதி...

இந்தச் சந்திப்பில் வேறு எவரும் கலந்துகொள்ளவில்லை. மூடிய அறைக்குள்ளேயே ஆலோசனை இடம்பெற்றுள்ளது.

இந்த ஆலோசனையை முதலில் வஜிர அபேவர்தன சமர்ப்பித்தார். அப்படி உடனடியாக ஜனாதிபதித் தேர்தலை நடத்தினால் அதை எவ்வாறு வெற்றிகொள்வது என்ற வழிகள் சில வற்றையும் அவர் பசிலிடம் விளக்கிக் கூறியுள்ளார்.

நான்கு வருடங்கள் நிறைவில் ஜனாதிபதி விரும்பினால் ஜனாதிபதித் தேர்தலை நடத்தலாம். அவசரம் ஏற்பட்டால் அடுத்த வருடம் நடுப் பகுதியில் தேர்தலை நடத்தலாம். இதை வைத்துக் கொண்டு வேறு எந்தத் தேர்தலையும் நடத்தாது அடுத்த வருடம் நடுப் பகுதியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவோம் என்று வஜிர அங்கு கூறினார்.

அவ்வாறு நடத்தினால் வடக்கு - கிழக்கு தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளும் மலையகத் தமிழர்களின் வாக்குகளும் ரணிலுக்குக் கிடைக்கும் என்று வஜிர சுட்டிக்காட்டினார்.

தமிழர்களுக்கு அரசியல் தீர்வை வழங்குவதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் தமிழர்கள் நிச்சயம் ரணிலுக்கே வாக்களிப்பர் என்றும், முஸ்லிம்களும் அவ்வாறே செய்வர் என்றும் வஜிர குறிப்பிட்டார்.

மொட்டுக் கட்சியின் கைகளில் இருக்கும் சிங்கள வாக்குகளை ரணிலுக்குப் பெற்றுத் தருவதற்கு நீங்கள் உரிய நடவடிக்கை எடுத்தால் எந்தவித சிக்கலும் இன்றி இலகுவாக ரணிலால் வெல்ல முடியும் என்றும் வஜிர மேலும் தெரிவித்தார். (4-7)

## அமைதிப்...

நேற்று அறிவித்துள்ளார்.

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்து இன்று 306ஆவது நாளை எட்டியுள்ளது. இந்த போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

இதனிடையே, இந்த போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ஆதரவு அளித்து வருகின்றன. உக்ரைனுக்கு தேவையான ஆயுத உதவியை வழங்குவதுடன் அமெரிக்கா மற்றும் மேற்கத்தேய நாடுகள் ரஷ்யா மீது பல்வேறு பொருளாதார தடைகளையும் விதித்துள்ளன.

இந்நிலையில் உக்ரைன் போர் தொடர்பாக அனைத்து தரப்புடனும் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருப்பதாகவும் ஆனால், உக்ரைனும் அதன் ஆதரவு மேற்கத்தேய நாடுகளும் அமைதி பேச்சுவார்த்தையை ஏற்க மறுப்பதாகவும் புடின் தெரிவித்துள்ளார். (4-7)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 25/12/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1435
வெற்றி இலக்கங்கள்
மகரம் 1 4 7 2 1 3
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.12.25
சீட்டிழுப்பு இலக்கம் - 1010
U 04 38 50 71
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2022.12.25
சீட்டிழுப்பு இலக்கம் 3222
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
F 23 47 50 54
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 25/12/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1328
வெற்றி எழுத்து சுப்பர் இலக்கம் வெற்றி இலக்கங்கள்
J 18 03 25 61 63

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.12.25
சீட்டிழுப்பு இலக்கம் 289
வெற்றி இலக்கங்கள்
துலாம் 01 15 43 57 துலாம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2022/12/25
சீட்டிழுப்பு இலக்கம் 4980
C 9 1 3 9 3 0
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1955 நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2022.12.25 தினம் ஞாயிற்றுக்கிழமை
வெல்லப்பட்ட மொத்தம் பரிசுத் தொகை ரூ. 2,200,820/-
T 20 39 44 53
6472 830

சனிதா
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.12.25
சீட்டிழுப்பு இல : 4116
வர்ணம் : இளஞ்சிவப்பு
ரூ. 2,420,020/-
வெற்றி இலக்கங்கள்
37 38 46 75 U

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 266
சீட்டிழுப்பு திகதி 2022.12.25 ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 20 24 32
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,911,200/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 4,698,004.80
திகதி 2022-12-25
வெற்றி வாரம் 3667
வர்ணம் ஊதா
வெற்றி இலக்கங்கள் 16 28 31 35
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 6,604,260/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Z 32 06 31 37 40
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1131
வர்ணம் மஞ்சள்
திகதி 2022.12.25 ஞாயிற்றுக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 288,929,849.80
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

அத கோடிபதி
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1781
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி : 2022.12.25
ரூ. 2,325,280/-
வெற்றி இலக்கங்கள்
13 19 65 70 P

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணிப்பெண் தேவை

இரண்டு குழந்தைகளை வீட்டில் தங்கிநின்று பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை.

தொடர்புகளுக்கு (13905)

**077 030 6881**

## வீடு விற்பனைக்கு

காங்கேசன்துறை வீதியில் (மனோகரா சந்திக்கு அருகாமையில்) வீடு விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை. (13889)

**077 961 7170**

## மடப்பள்ளி வேலை செய்வதற்கு ஆள் தேவை

வல்வெட்டித்துறை நகர மத்தியில் அமைந்துள்ள சிவன் தேவஸ்தானத்திற்கு நித்திய மடப் பள்ளி வேலை செய்வதற்கு அந்தணகுலத்தை சேர்ந்தவர் தேவைப்படுகிறது.
தங்குமிட வசதி உண்டு.
விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொ.பே இல. (C-5571)

**077 706 7698**

வலம்புரி
விளம்பரங்களுக்கு
தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127

## பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
**V2 TRAVELS** (C-5664)

எமது கிளைகள்
• சுன்னாகம் • கோப்பாய் • சாவகச்சேரி • நெல்லியடி • கொடிகாமம் • புத்தூர் • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • பண்டத்தரிப்பு

• பயிற்சிக்கால ஊக்கத்தொகை - 30,000/-
• பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
• பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
• வேலையின்போது ஆரம்ப சம்பளம் - 35,000/-

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம். **0777-068-777**

## சமையல் வேலை

யாழ்ப்பாணத்தில் சமையல் வேலைக்கு தங்கி இருந்து வேலை செய்யக்கூடிய ஆட்கள் தேவை. (C-5664)



சம்பளம் 30,000/-
தங்குமிடம்
3 நேரம் சாப்பாடு வழங்கப்படும்
(பெண்கள் விரும்பத்தக்கது)
40 வயதுக்கு உட்பட்டவர்கள்

CIMS COLLEGE 0767093368

## அறுசுவை உணவுகளிற்கு சுத்தமான

# றோயல் நெய்

உங்கள் வாழ்வின் இனிய தருணங்களை தரமான **றோயல் நெய்** கொண்டு தயாரித்த அறுசுவை உணவுகளுடன் கொண்டாடி மகிழுங்கள்.

ஆய்வுகூடத்தில் தரம் பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகின்றது.




Packed By:-
**Royal Industries®**
Marketed By:-
**சிவா நறுமணப் பூங்கா®**
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: **021 2222 567**

**குறிப்பு**
யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து பாமசிகளிலும் சுப்பர்மார்க்கட்களிலும் பலசரக்கு கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். (C-5661)

## பதவி வெற்றிடம்

பருத்தித்துறையில் இயங்கிவரும் சூரிய மஹால் திருமண மண்டபத்திற்கு பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**கணக்கீட்டு உதவியாளர் (Accounting Assistant)**
அடிப்படை தகைமை
- வயது எல்லை 24 - 40
- துறைசார் பட்டப்படிப்பு, டிப்ளோமா
- க.பொ.த உயர்தரத்தில் வணிகப் பிரிவில் சித்தி பெற்றிருத்தல்.

**காசாளர் (Cashier)**
அடிப்படை தகைமை
- வயது எல்லை 21 - 45
- க.பொ.த சாதாரண தரத்தில் சித்தி பெற்றிருத்தல்.
- அடிப்படை கணனி அறிவு.

**மேற்பார்வையாளர் (Supervisor)**
அடிப்படை தகைமை
- வயது எல்லை 27 - 50
- துறைசார்ந்த அறிவு.
- முன்அனுபவம் விரும்பத்தக்கது.

(C-5659)

**நேர்முகத் தேர்வு 31.12.2022 (சனிக்கிழமை) அன்று சூரியமஹால் திருமண மண்டபத்தில் (பிரதான வீதி, பருத்தித்துறை) பி.ப 3.00 மணிக்கு இடம்பெறும்.**

**076 704 6623, 077 881 1530, 077 704 6623**

shuriyamahal@gmail.com

# 75 வது பிறந்தநாளும் 24 வது ஆண்டு நினைவு நாளும்

முன்னாள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்.மாவட்ட செயலாளர் நாயகமும்
அனைத்துலக எம்.ஜி.ஆர் பேரவைத் தலைவரும் சமாதான நீதவானும் திருமுருகன்
களஞ்சிய உரிமையாளரும் முன்னாள் வட பிராந்திய மினிபஸ் சங்கத் தலைவருமாகிய


## உயர்திரு. பொன்னுத்துரை மதிமுகராஜா

திதி: 26.12.2022 திங்கட்கிழமை



கடவுள் கொடுத்த வரம் கிடைக்கவில்லை
கடவுளே (அப்பா) கிடைத்தார் வரமாக
நான் பிறந்தபோது என் பெயரின் பின்னால்
வரும் முதல் எழுத்து நீங்கள்தான் என்று
என் வாழ்க்கையை அழகாக மாற்றிக் கொடுத்து
எங்கள் பின்னால் நிற்பதும் நீங்கள் மட்டும்தான்
அப்பா என்னும் எங்கள் தெய்வம்
தெய்வங்கள் எல்லாம் தோற்றே போகும்
தந்தை அன்பின் முன்னே!
காலை கண் விழிக்கும் நொடிகள் எல்லாம்
உங்கள் ஞாபகங்கள் அப்பா!
உங்கள் நினைவுகள் எங்கள் மனதில்
அழியாச் சுவடாய் பொதிந்துள்ளன.

நீங்கள் இல்லாத வாழ்க்கை நரகமாய் உள்ளது அப்பா!
உங்களைப் பிரிந்து 24 ஆண்டுகள் ஆனாலும்
அன்று முதல் இன்றுவரை உங்கள் அன்பிற்கு
இணை யாருமில்லை அப்பா!
உங்கள் பாசத்திற்கு ஏங்கும் எங்கள் ஏக்கங்கள்
உணர முடியாத வலியாய் எங்களைக் கொல்கின்றது அப்பா
இன்றோ உங்கள் பிறந்த நாள். ஆனால்
எங்கள் மனம் நினைவஞ்சலி செலுத்த மறுக்கின்றது அப்பா
ஆகாயத்தின் எல்லை என்று கூறினால்
அது உங்கள் உருவம்தான் அப்பா!
நீங்கள் வேண்டும் உங்களுடன் வாழ்ந்த அந்த
பொக்கிஷமான நாட்கள் வேண்டும் அப்பா!
சின்ன வயதில் இழக்கக்கூடாத சொத்து நீங்கள் அப்பா!
அப்பா நீங்கள் எங்கள் அருகில் இருக்கையில்
இறைவன் கூடத் தேவையில்லை.



(13911)

மண்ணில் 24.01.1948
விண்ணில் 26.12.1998

பொன் மதிமுகராஜா விஜயலக்ஸ்மி (மனைவி), மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பொன் மதிமுகராஜா விஜயகாந்த் (தலைவர் - அனைத்துலக எம்.ஜி.ஆர் பேரவை சமூக சேவை அமைப்பாளர், யாழ்ப்பாணம், இலங்கை)
ஸ்ரீமுருக பவனம், தாவடி வடக்கு, கொக்குவில்.
அனைத்துலக சமூக சேவைகள் நற்பணி, பொதுப் பணிச் செயலகம்,
(கே.கே.எஸ்.வீதி, தாவடிச்சந்தி, யாழ்ப்பாணம், இலங்கை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.12.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.